மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 10–ம் நாள் செவ்வாய் கிழமை

அ.வ.எண்.6/2019

நீ.மா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 44 வது சட்ட ஏற்பாட்டின்படி) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: உமா தேதி : 10.06.25

வயது : த/பெ : விஜயன்

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

---

<u>10.06.25 சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை( பிரதிவாதிகள் தரப்பில்)</u>

1. நான் கடந்த 18.8.2021 தேதியில் இருந்து மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பு 9 ஆண்டுகளாக சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் பணிபுரிந்தேன். நான் மொத்தம் 13 ஆண்டுகளாக தடய அறிவியல் துறையில் பணிபுரிந்து வருகிறேன். சென்னையில் ஆரம்பத்தில் இளநிலை அறிவியல் அலுவலராக பணியில் சேர்ந்தேன். 3 ஆண்டுகள் கழித்து பதவி உயர்வு பெற்று அறிவியல் அலுவலராக பணியமர்த்தப்பட்டேன். நான் TNPSC ல் தேர்ச்சி பெற்று பிறகு நேர்காணல் தேர்வுக்கு அடுத்து பணியமர்த்தப்பட்டேன்.

2. எனது பணி என்னவென்றால் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்படும் ஆவணங்களை ஆய்வு செய்து கருத்துரை வழங்குவதாகும். என் உயர் அதிகாரிகள் இவ்வழக்கில் ஆவணத்தை ஆய்வு செய்ய எனக்கு உத்தரவு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.06.10 13:10:02 +0530

பிறப்பித்தார்களா என்றால் ஆவணத்தை ஆய்வு செய்யும் படி எனக்கு ஒதுக்கீடு செய்து கொடுத்தார்கள். எழுத்து மூலமான உத்தரவு பிறப்பித்தார்களா என்றால் அலுவலக உள் ஒதுக்கீடு முறைகளில் ஒவ்வொரு வழக்கிற்கும் எழுத்து மூல உத்தரவு பிறப்பபிப்பது கிடையாது. ஒவ்வொரு வழக்கிற்கும் தனிப்பட்ட எழுத்து மூல உத்தரவு உயர் அதிகாரியால் பிறப்பிகக்கபப்படும் என்றால் சரியல்ல.

3. என்னிடம் காண்பிக்கப்படும் சா.சா.ஆ.1 நான் வழங்கியதுதான். சா.சா.ஆ்1 ல் பெருமாள் என்பவரைதான் சாட்சியாக விசாரிக்க அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர் ஓய்வு பெற்று விட்டதால் எனக்கு அழைப்பாணை வந்தது. நான் வழக்கிற்காக பெருமாள் ஓய்வு பெற்றதாக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெருமாள் ஓய்வு பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். பெருமாளுக்கு அழைப்பணை வரவில்லை. எனக்குதான் வந்தது. எனது முதல் விசாரணையின் போது பெருமாளுக்கு அழைப்பாணை வரவில்லை என்று கூறினேனா என்றால் என்னிடம் அதுப்பற்றி கேட்கப்படவில்லை.

4. என் மூலம் சா.சா.ஆ1 குறியீடு செய்யப்பட்டது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. பெருமாள் மூலம் தான் சா.சா.ஆ 1 குறியீடு செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. சா.சா.ஆ 1ல் இயற்கை மாறுபாடுகள் உள்ளன என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனை நானும் துணை இயக்குநர் பெருமாளும் சேர்ந்து தான் கண்டறிந்தோமா என்றால் ஆம். ஆவணத்தை பார்த்தவுடன் அதில் உள்ள கையொப்பத்தில் உள்ள இயற்கை மாறுபாடுகளை கூறமுடியுமா என்றால் அறிவியல் ஆய்வின் அடிப்படையில் தான் கூறமுடியும்.

5. Q8 மற்றும் Q9 எந்த மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் நீல நிற மையினால் தான் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ1ல் கண்ட சாட்சிகளின் கையெழுத்து குறித்து அறிக்கை பெற அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. நானும் துணை இயக்குநர் பெருமாளும் சேர்ந்து இவ்வழக்கில் கண்ட ஆவணத்தை ஆய்வு செய்ததாக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.10 13:10:11 +0530

நான் துணை இயக்குநர் பெருமாளுக்கு உதவி செய்திருக்கலாமே தவிர கையெழுத்துக்களை ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ1 உண்மை தன்மையை நிரூபிக்க கூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணம் இறுதியானது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–
திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையில் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN

Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.06.10 13:10:19 +0530